# இன்றைய இறைவார்த்தை

# 14-07-2015

**ஆண்டின் பொதுக்காலம் 15ஆம் வாரம் – செவ்வாய்**
**முதல் ஆண்டு**

**முதல் வாசகம்:**

"நீரிலிருந்து நான் இவனை எடுத்தேன்" என்று கூறி
அவள் அவனுக்கு "மோசே" என்று பெயரிட்டாள்.

**விடுதலைப் பயண நூலிலிருந்து வாசகம். 2 : 1 – 15**

அந்நாள்களில் லேவி குலத்தவர் ஒருவர் லேவி குலப் பெண்ணொருத்தியை மணம் செய்து கொண்டார். அவள் கருவுற்று ஓர் ஆண் மகவை ஈன்றெடுத்தாள். அது அழகாயிருந்தது என்று கண்டாள். மூன்று மாதங்களாக அதனை மறைத்து வைத்திருந்தாள். இதற்கு மேல் அதனை மறைத்து வைக்க இயலாததால், அதனுக்காகக் கோரைப் புல்லால் பேழை ஒன்று செய்து, அதன் மீது நிலக்கீல், கீல் இவற்றைப் பூசினாள். குழந்தையை அதனுள் வைத்து நைல் நதிக் கரையில் உள்ள நாணல்களுக்கிடையில் விட்டு வைத்தாள். அதற்கு என்ன ஆகுமோ என்பதை அறிந்து கொள்ளக் குழந்தையின் சகோதரி தூரத்தில் நின்று கொண்டிருந்தாள். அப்போது பார்வோனின் மகள் நைல் நதியில் நீராட இறங்கிச் சென்றாள். அவள் தோழியரோ நைல் நதிக்கரையில் உலாவிக் கொண்டிருந்தனர். அவள் நாணலிடையே பேழையைக் கண்டு தன் தோழி ஒருத்தியை அனுப்பி அதை எடுத்தாள். அதைத் திறந்த போது ஓர் ஆண் குழந்தையைக் கண்டாள் அது அழுது கொண்டிருந்தது. அதன் மேல் அவள் இரக்கம் கொண்டாள். "இது எபிரேயக் குழந்தைகளுள் ஒன்று" என்றாள் அவள். உடனே குழந்தையின் சகோதரி பார்வோன் மகளை நோக்கி, "உமக்குப் பதிலாகப் பாலூட்டி இக்குழந்தையை வளர்க்க, எபிரேயச் செவிலி ஒருத்தியை நான் சென்று அழைத்து வரட்டுமா?" என்று கேட்டாள். பார்வோனின் மகள் அவளை நோக்கி, "சரி. சென்று வா" என்றாள். அந்தப் பெண் சென்று குழந்தையின் தாயையே அழைத்து வந்தாள். பார்வோனின் மகள் அவளை நோக்கி, "இந்தக் குழந்தையை நீ எடுத்துச் செல். எனக்குப் பதிலாக நீ பாலூட்டி அதனை வளர்த்திடு. உனக்குக் கூலி கொடுப்பேன்" என்றாள்.

எனவே குழந்தையை எடுத்துச் சென்று அதனைப் பாலூட்டி வளர்த்தாள் அப்பெண். குழந்தை வளர்ந்த பின் அவள் பார்வோனின் மகளிடம் அவனைக் கொண்டுபோய் விட்டாள். அவள் அவனைத் தன் மகன் எனக் கொண்டாள். "நீரிலிருந்து நான் இவனை எடுத்தேன்" என்று கூறி அவள் அவனுக்கு "மோசே" என்று பெயரிட்டாள்.

அக்காலத்தில் மோசே வளர்ந்துவிட்ட போது தம் இனத்தவரிடம் சென்றிருந்தார். அவர்களுடைய பாரச் சுமைகளையும் பார்த்தார். மேலும், தம் இனத்தவனான எபிரேயன் ஒருவனை எகிப்தியன்

ஒருவன் அடிப்பதையும் கண்டார். சுற்றுமுற்றும் பார்த்து, யாருமே இல்லையெனக் கண்டு, அந்த எகிப்தியனை அடித்துக் கொன்று மணலுக்குள் புதைத்து விட்டார். அடுத்த நாள் அவர் வெளியே சென்றபோது, எபிரேயர் இருவருக்கு இடையே கைகலப்பு நடந்து கொண்டிருந்ததைக் கண்டார். குற்றவாளியை நோக்கி, "உன் இனத்தவனை ஏன் அடிக்கிறாய்?" என்று கேட்டார். அதற்கு அவன், "எங்கள் மேல் உன்னைத் தலைவனாகவும் நடுவனாகவும் நியமித்தவன் எவன்? எகிப்தியனைக் கொன்றது போல் என்னையும் கொல்லவா நீ இப்படிப் பேசுகிறாய்?" என்று சொன்னான். இதனால் மோசே அச்சமுற்றார். "நடந்தது தெரிந்துவிட்டது உறுதியே" என்று சொல்லிக் கொண்டார்! இச்செய்தியைப் பார்வோன் கேள்வியுற்றபோது மோசேயைக் கொல்லத் தேடினான். எனவே மோசே பார்வோனிடமிருந்து தப்பியோடி, மிதியான் நாட்டில் குடியிருக்க வேண்டியதாயிற்று.

**ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.**
**இறைவா! உமக்கு நன்றி.**

**பதிலுரைப்பாடல்:**
**திருப்பாடல்கள்: 69 : 2, 13, 29 – 30, 32 – 33 (பல்லவி 32b)**
**பல்லவி: கடவுளை நாடித் தேடுவோரே, உங்கள் உள்ளம் ஊக்கமடைவதாக.**

1. ஆழமிகு நீர்த்திரளுள் அமிழ்ந்திருக்கின்றேன். நிற்க இடமில்லை. நிலைகொள்ளாத நீருக்குள் ஆழ்ந்திருக்கின்றேன். வெள்ளம் என்மீது புரண்டோடுகின்றது. பல்லவி

2. ஆண்டவரே! நான் தக்க காலத்தில் உம்மை நோக்கி விண்ணப்பம் செய்கின்றேன். கடவுளே! உமது பேரன்பின் பெருக்கினால் எனக்குப் பதில்மொழி தாரும். துணை செய்வதில் நீர் மாறாதவர். பல்லவி

3. எளியேன் சிறுமைப்பட்டவன், காயமுற்றவன். கடவுளே! நீர் அருளும் மீட்பு எனக்குப் பாதுகாப்பாய் இருப்பதாக! கடவுளின் பெயரை நான் பாடிப் புகழ்வேன். அவருக்கு நன்றி செலுத்தி, அவரை மாட்சிமைப்படுத்துவேன். பல்லவி

4. எளியோர் இதைக் கண்டு மகிழ்ச்சி அடைவார்கள். கடவுளை நாடித் தேடுகிறவர்களே, உங்கள் உள்ளம் ஊக்கமடைவதாக. ஆண்டவர் ஏழைகளின் விண்ணப்பத்திற்குச் செவி சாய்க்கின்றார். சிறைப்பட்ட தம் மக்களை அவர் புறக்கணிப்பதில்லை. பல்லவி

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி: (திருப்பாடல்: 95 : 8b, 7b)**
அல்லேலூயா, அல்லேலூயா!
இன்று உங்கள் இதயத்தைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள்.
மாறாக நீங்கள் அவரது குரலுக்குச் செவிகொடுத்தால் எத்துணை நலம்.
அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம்:**

தீர்ப்பு நாளில் தீருக்கும் சீதோனுக்கும் கிடைக்கும் தண்டனையை விட உங்களுக்குக் கிடைக்கும் தண்டனை கடினமாகவே இருக்கும்.

✠ **தூய மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம். 11 : 20 – 24**

அக்காலத்தில் இயேசு வல்ல செயல்கள் பல நிகழ்த்திய நகரங்கள் மனம் மாறவில்லை. எனவே அவர் அவற்றைக் கண்டிக்கத் தொடங்கினார். "கொராசின் நகரே, ஐயோ! உனக்குக் கேடு! பெத்சாய்தா நகரே, ஐயோ! உனக்குக் கேடு! ஏனெனில் உங்களிடையே செய்யப்பட்ட வல்ல செயல்கள் தீர், சீதோன் நகரங்களில் செய்யப்பட்டிருந்தால் அங்குள்ள மக்கள் முன்பே சாக்கு உடை உடுத்திச் சாம்பல் பூசி மனம் மாறியிருப்பர். தீர்ப்பு நாளில் தீருக்கும் சீதோனுக்கும் கிடைக்கும் தண்டனையைவிட உங்களுக்குக் கிடைக்கும் தண்டனை கடினமாகவே இருக்கும் என நான் உங்களுக்குச் சொல்கிறேன். கப்பர்நாகுமே, நீ வானளாவ உயர்த்தப்படுவாயோ? இல்லை, பாதாளம் வரை தாழ்த்தப்படுவாய். ஏனெனில் உன்னிடம் செய்யப்பட்ட வல்ல செயல்கள் சோதோமில் செய்யப்பட்டிருந்தால் அது இன்று வரை நிலைத்திருக்குமே! தீர்ப்பு நாளில் சோதோமுக்குக் கிடைக்கும் தண்டனையைவிட உனக்குக் கிடைக்கும் தண்டனை கடினமாகவே இருக்கும் என நான் உங்களுக்குச் சொல்கிறேன்" என்றார்.

**கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.**
**கிறிஸ்துவே! உமக்குப் புகழ்.**

**சிந்தனைக்கு:**
இன்றைய நற்செய்தியில் கூறப்பட்ட நகரங்கள் இயேசுவோடு மிகத் தொடர்புடையவை. கொராசின் நகர் பற்றிய குறிப்பு அதிகமாக இல்லை. பெத்சாயிதா நகரில் ஐந்து அப்பங்கள் பலுகினது (லூக்கா 9:10), கடலில் நடந்தது (மாற்கு 6:45) ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன. கப்பர்நகூமில் நூற்றுவர் தலைவனின் பையனைக் குணமாக்குகிறார், பேதுருவின் மாமியார் வீடு இங்கு உள்ளது, பேதுரு, அந்திரேயா, யோவான், யாக்கோபு

இவர்களின் சொந்த ஊர் இது. இயேசுவின் சொந்த ஊர் என்றும் இவ்வூர் அழைக்கப்படுகிறது (மத்தேயு 9:1, 9:18, 8:14-16). இயேசு தம் போதனைகளால், புதுமைகளால், செயல்பாடுகளால் மக்கள் விழிப்பணர்வு பெற, புதுவாழ்வுக்கு அடியெடுத்து வைக்க எவ்வளவோ முயன்றும், மக்களின் ஒத்துழையாமையை எண்ணி மனம் நொந்து இக்கடின சொற்களைப் பயன்படுத்துகிறார்.

வல்ல செயல்கள், அருட்கொடைகள். வாழ்வின் நலன்கள் கடவுள் நமக்குத் தரும் நல் வாய்ப்புக்கள். அதுபோல, இன்றைய நம் வாழ்விலும் கடவுள் தரும் கொடைகள், செல்வங்கள், அறிவுரைகள், அருளுரைகள், அன்றாட அதிசய நிகழ்வுகள் ஆகியவை இன்று நமக்கும், நம் ஊருக்கும், நகருக்கும், நாட்டுக்கும், இறைவன் கொடுக்கும் வாய்ப்புக்கள். இவற்றைப் பயன்படுத்தத் தவறினால், எச்சரிக்கை நமக்கும்தான். இந்த நகரங்கள் ஊர்கள் பெயர்கள்தான் உள்ளன என்று எண்ணாதே! உன் ஊர், நகர், நாடு இந்த வரிசைப்பட்டியலில் வராது பார்த்துக்கொள். வாழ்த்துக்கள். ஆசீர்.

**********